## தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - C

## 2025-04-06

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 43:16-21,*

*திருப்பாடல் 126: 1-2. 2-3. 4-5. 6,*

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3: 8-14,*

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 8: 1-11)*

*திருப்பலி முன்னுரை*

*மாற்றத்துக்கு உரியவர்களே, மன்னிப்பளிக்கும் கடவுளின் பெயரால் இன்றைய திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இன்று நாம் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். இன்றைய திருவழிபாடு, பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு புதிய அருள் வாழ்வுக்கு கடந்து செல்ல நம்மை அழைக்கிறது. நாம் எத்தனை முறை பாவம் செய்தாலும், மனம் வருந்தி ஆண்டவரிடம் திரும்பும்போது, நம்மை மன்னிக்க அவர் தயாராக இருக்கிறார். பிறரது குற்றங்களை அலசி ஆராயும் நாம், நமது பாவங்களை எண்ணிப் பார்க்க வேண்டுமென ஆண்டவர் இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். எல்லோரும் நம்மை விட்டுச் சென்ற பிறகு, நாம் கடவுள் முன் கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். இயேசுவைப் பின்பற்றி வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும், நமது பாவ வாழ்வை களைந்து விட்டு அவரிலே புதுவாழ்வு பெறும் வரம் வேண்டி, இத்திருப் பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வியப்புக்குரிய எம் இறைவா!*

*உம் திருமகனுக்காக மிகவும் உள்ளார்ந்த விதமாய் வாழ அழைக்கப்பட்டவர்களான எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள்,இருபால் துறவியர் அனைவரும் உம்மகனில் புதுப்பிக்கப்பட இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*அனைத்துப் படைப்புக்களாலும் புகழப்படும் எம் இறைவா!*

*அனைத்துலகும் உம் பெருமைமிகு திருமகனால் அணி செய்யப்பட்டு, 'இயேசுவே ஆண்டவர்' என்ற உயர்நிலைக்கு உயர்ந்திட வரம் அருள இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*ஒப்பற்ற செல்வமான திருமகனின் தந்தையே!*

*இயேசு என்ற பெரும் செல்வம் பொருட்டு ஏனையவைகளைக் குப்பையெனக் கருதும் மனஉறுதி தாரும். இதனால் வாழ்வின் வியத்தகு வளமையை உணர்ந்திட இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இனிமையே இறைவா!*

*கிறிஸ்துவின் மீதான எமது நம்பிக்கையை அதிகமாக்கும். அப்பேற்றின் மூலம் நாங்கள் உமக்கு ஏற்புடையோர் ஆக இறைவா! உம்மை வேண்டுகிறோம்.*

*மன்னிப்பே இறைவா!*

*எமதாண்டவர் இயேசு வழியாக எம்மை உம்மோடு இணைத்திட்ட பேற்றுக்காக நன்றி. மாண்புடைய கிறிஸ்து இயேசுவில் எமது மன்னிப்பு தொடராக்கம் பெற அருள் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*பரிவுள்ள இறைவா!*

*காணாமல் போன மகன் உவமை வாயிலாக, கனிவுள்ள உம்மை உணர்கின்றோம். நாங்கள் பரிவு கனிவு இவைகளின் ஆதாரமான கிறிஸ்துவின் நீட்சிகளாய் வாழ வரம் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*